அலகு

3

# தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

ABCE5Z

## கற்றல் நோக்கங்கள்

- சங்ககாலம் ஒரு வாழ்வியல் பொற்காலம் என அறிந்து கொள்ளுதல்.
- சங்க இலக்கியங்கள்வழி வாழ்வியல் விழுமியங்களை அறிதல்.
- உலகப் பொதுமறையான திருக்குறள் மூலம் வாழ்வின் பெருமைகளைத் தெரிந்து கொள்ளுதல்.
- தமிழ் இலக்கியங்களின்வழி வாழ்வியலில் பெண்களின் நிலையை அறிதல்.
- தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிமுறைகளைப் புரிந்து கொள்ளுதல்.
- இதிகாசங்கள் மற்றும் காப்பியங்களில் கூறப்பட்ட வாழ்வியல் அறநெறிகளைப் புரிந்து கொள்ளுதல்.

## நுழைவு வாயில்

புதிய கற்காலத்தில் பண்பட்ட வாழ்வைத் தொடங்கிய மனித சமுதாயம், நாளடைவில் பல வளர்ச்சிகளைக் கண்டது. இதில், குறிப்பாக மக்களின் நாகரிகமும் பண்பாடும் மேம்பட்டன. இதற்கு அடிப்படையாக, இலக்கியங்களும் அவற்றில் உள்ள விழுமியங்களும் காரணங்களாக அமைந்தன. இவற்றைப் பற்றி அறிவது நமது கடமையாகும். தமிழர்களின் விழுமியங்களான காதல், நட்பு, உதவி, வாய்மை, விருந்தோம்பல், வீரம், கொடை முதலானவை வழியே வெளிப்படும் வாழ்வியல் நெறிமுறைகள் இப்பகுதியில் விரிவாக எடுத்துரைக்கப்படுகின்றன. இவை அனைத்தும் தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்பைச் சுட்டிக்காட்டுகின்றன.

தமிழர்களின் பண்பாட்டு வளர்ச்சியின் ஊற்றுக் கண்களாகத் திருக்குறள், நன்னூல், நாலடியார், ஐம்பெருங்காப்பியங்கள், கம்பராமாயணம் மற்றும் வில்லிபாரதம் முதலான நூல்கள் அமைந்துள்ளன. தமிழர் பண்பாடும் நாகரிகமும் உலகளவில் சிறப்புப் பெற்றமைக்கு இந்நூல்களில் சொல்லப்பட்டுள்ள உயர்வான அறநெறிக் கருத்துகளே காரணங்களாக அமைந்துள்ளன என்பதை இப்பாடத்தில் விரிவாகக் காண்போம்.

### மனித நாகரிகத்தின் வளர்ச்சி

நிலையான இருப்பிடமின்றி நாடோடிகளாகத் திரிந்த மனித இனம், தாம் வாழ்ந்த இடத்திற்கு அருகிலேயே விலங்குகளை வளர்த்து, நிலங்களை உழுது, பயிரிடும் வேளாண் சமூகமாக உருமாறியது. வேட்டைச் சமூகமாகத் திகழ்ந்தபோதும், வேளாண் சமூகமாக மாற்றம் பெற்றபோதும் மனித இனம் குடும்பமாகவும் சமூகமாகவும் சேர்ந்து வாழத்தொடங்கியது. அதற்கேற்பப் பல அகப்புற மாற்றங்களை அது சந்திக்க வேண்டியிருந்தது.

இத்தகைய மாற்றங்களுக்கேற்ப மனிதன் தன்னைச் சுற்றியுள்ள புறச்சூழல்களை மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மேய்ச்சல் நிலங்களைத் தேடிப்போவதற்கு மாறாக நிலையான குடியிருப்பை மனிதன் ஏற்படுத்திக் கொண்டான்; உணவுக்காக விளைநிலங்களை உருவாக்கினான். ஆற்றங்கரை ஓரங்களிலும் சமவெளிப்பகுதிகளிலும் கிராமங்களாகவும் நகரங்களாகவும் அமைந்த குடியிருப்புகள்



Unit 3.indd 36 13-02-2020 19:58:14

நாளடைவில் நாடுகளாக வளர்ச்சி பெற்றன. இவ்வளர்ச்சிக்கு மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு உற்பத்திக் கருவிகள் உறுதுணையாக இருந்தன.

சக்கரம், படகு போன்ற கருவிகள் நிலத்திலும் நீரிலும் மனிதனின் போக்குவரத்திற்குப் பயன்பட்டன. இப்போக்குவரத்துக் கருவிகள் கிராமம், நகர், நாடுகளுக்கிடையேயான உற்பத்திப் பொருளைப் பரிமாற்றம் செய்யும் வணிகத்தை வளரச்செய்தன. இவ்வாறாகப் புறநிலையில் வேட்டைச் சமூகத்திலிருந்து வேளாண் சமூகமாகவும், வணிகச் சமூகமாகவும் மாற்றம் பெறுவதற்கு மனிதஇனம் தனக்குள்ளாகவே உறவுநிலைகளை மேம்படுத்திக்கொண்டது. அதே நேரத்தில் ஒன்றுபட்டு வாழ, பல்வேறு நெறிமுறைகளையும் அது உருவாக்கிக்கொள்ள வேண்டியிருந்தது.

புறவளர்ச்சிக்கு உற்பத்திக் கருவிகள் எவ்வளவு முதன்மையானவையோ அது போலவே உறவு மேம்பாட்டிற்கு மனிதர்கள் தமக்குள் வகுத்துக்கொண்ட நெறிமுறைகள் தவிர்க்க முடியாதவையாக விளங்கின. பல்வேறு இனக்குழுக்களாக வாழ்ந்துகொண்டிருந்த மனித இனம், ஒன்று சேர்ந்து வாழ உதவிய இந்நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டே குடும்பம், சமூகம், நாடு போன்ற நிறுவனங்கள் தோன்றின. இந்நிறுவனங்களைச் செழுமைப்படுத்துவதற்குத் தனிமனிதன், குடும்பத்தினர், சமூகத்தினர் அதற்குத் தலைமை தாங்கிய தலைவர்கள் ஆகியோர் தமது விருப்பு வெறுப்புகளை நெறிப்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தது. இந்நெறிமுறைகளுக்குத் தன்னல மறுப்பும் பொதுநல விருப்புமே அடிப்படையாக இருந்தன. இத்தகைய விழுமியங்களைப் பேணிக்காத்துச் செழுமைப்படுத்துவதன் மூலமே மனித இனம் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் வாழமுடியும் என்ற சூழல் உருவானது.

**உங்களுக்குத் தெரியுமா?**

தமிழ் இலக்கியங்கள் தொன்றுதொட்டு அறம் – அன்பு – அருள் – அடக்கம் – அமைதி – அறிவு – ஆற்றல் – உண்மை – உழைப்பு – நேர்மை – நாணயம் – உயர்வு – ஒழுக்கம் – இரக்கம் – ஈகை – வீரம் – தீரம் – காதல் – கடமை – நீதி – நெறி முதலானவற்றை உள்ளடக்கியதாகும்.

மக்கள் தம் சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஒன்றுபட்டு வாழ்வதற்கான வழிமுறைகளையும் விழுமியங்களையும் ஏற்படுத்திக்கொண்டனர். இவ்விழுமியங்களை, அடிப்படையானவை; மாற்றத்திற்கு உட்பட்டவை; மனித இனம் முழுமைக்கும் பொதுவானவை; குறிப்பிட்ட சமூகத்திற்கு மட்டும் உரியவை என வகுத்துக் கொண்டனர். இத்தகைய விழுமியங்களைக் காலந்தோறும் தமிழிலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

### காதல்

சங்க இலக்கியங்கள், தலைவன் தலைவிக்கு இடையே தோன்றும் காதல் உணர்வை உயர்ந்த இடத்தில் வைத்துப்போற்றுகின்றன. தொல்காப்பியம், “மனமொத்த இருவருக்கிடையே தோன்றும் காதல், நிலைபேறு உடையதாக அமையும்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை,

“பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே”

(தொல்: பொருளதிகாரம்: 269)

எனப் பத்துப் பொருத்தங்களாக அது விரித்துக் கூறுகிறது. ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் காதல் வயப்படும்போது ‘செம்புலப் பெயல் நீர்போல’ அன்புடைய நெஞ்சங்கள் கலந்தவர்களாக இருந்துள்ளனர் எனக் குறுந்தொகை குறிப்பிடுகின்றது.



Unit 3.indd 37 13-02-2020 19:58:14

மருத நிலத்தில் தாமரை மலர்ந்திருக்கிறது. வண்டு அம்மலரிலிருந்து தேனை எடுக்கிறது. அத்தேனை யாராலும் தொட முடியாத குறிஞ்சி நில மலைஉச்சியில், ஓங்கி வளர்ந்துள்ள சந்தன மரத்தில் தேனடையாக வைத்துப் பாதுகாக்கிறது. அதுபோலத் தலைவியின் அன்பைப் பாதுகாத்து வைப்பவன் தலைவன். மருத நிலத்தில் வாழும் தலைவியின் காதலைக் குறிஞ்சி நிலத் தலைவன் பாதுகாத்து வைக்கும் நெறியை

"நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர்
என்றும் என்தோள் பிரிவு அறியலரே
தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தில் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற, புரையோர் கேண்மை

(நற்றிணை 1: 1-5)

என்னும் பாடல் உயர்ந்த அன்பின் தூய்மையையும் மேன்மையையும் ஒரு சேரப் புலப்படுத்துகிறது.

## நட்பு

உள்ளத்தால் ஒன்றியவர்களுக்கிடையில் தோன்றும் அன்பின் உறவே நட்பாகும். மனித உறவுகளில் மிகவும் பெருமை உடையதாகக் கருதப்படுவது நட்பு. நட்பின் பெருமையைச் சங்க இலக்கியங்கள் போற்றிப் பதிவுசெய்துள்ளன. ஒருவருடைய உயர்வுக்கு உழைப்பும், விடா முயற்சியும் காரணமாக இருப்பதுபோல, நல்லோர் நட்பும் காரணமாக அமைகிறது.

நட்பின் இயல்பு குறித்து

உயிர்ஓர் அன்ன செயிர் தீர் நட்பின்

(நற்றிணை 72: 3)

………. யாக்கைக்கு
உயிர் இயைந்து அன்ன நட்பின்

(அகநானூறு 339: 11-12)

எனச் சங்கப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. எலியைப்போல் சிறிய முயற்சி உடையவரோடு நட்புக்கொள்வதினும் புலியைப்போன்ற வலிமையும் முயற்சியும் உடையவருடன் நட்புக் கொள்வதே சாலச் சிறந்தது என்பதனை,

புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்
துரனுடை யாளர் கேண்மை யோடு
இயைந்த வைகல் உளவா கியரோ

(புறநானூறு 190: 10-12)

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

உயர்நிலை உலகம் அமிழ்தொடு பெறினும்
பொய்சேண் நீங்கிய வாய்நட் பினையே

(மதுரைக் காஞ்சி – 196 -197)

பெறற்கரிய பெரும்பேறு கிடைப்பதாக இருந்தாலும் பொய்மை கலந்த நட்புப் பழியொடு முடியும். எனவே, வாய்மை நிறைந்த நட்பே தூய்மையானது, சிறந்தது, தகுதியானது என்கிறார் மாங்குடி மருதனார்.



**அதியமான்–ஔவையார்**

அரிதாகக் கிடைத்த நெல்லிக்கனியை ஔவைக்குக் கொடுத்த அதியமான், கோப்பெருஞ்சோழனோடு வடக்கிருந்து உயிர்விட்ட பிசிராந்தையார், பாரியின் இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொண்ட கபிலர் போன்றோரை நட்பிற்கு இலக்கணங்களாகச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

## உதவி

பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

"பிறர்நோயும் தம்நோய்போல் போற்றி அறன்அறிதல் சான்றவர்க்கு எல்லாம் கடன்".

(கலித்தொகை.139:2-3)

என்று, பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி



Unit 3.indd 38 13-02-2020 19:58:15

உதவுதல் பற்றி நல்லந்துவனார் குறிப்பிடுகிறார்.

உண்மையான செல்வம் என்பது, 'பிறர்துன்பம் தீர்ப்பதுதான்' என்கிறார் நல்வேட்டனார்.

சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர் புன்கண்
அஞ்சும் பண்பின் மென்கட் செல்வம் என்பதுவே
(நற்றிணை.210:7-9)

உறவினர் கெட வாழ்பவனின் பொலிவு அழியும் என்று பெருங்கடுங்கோ குறிப்பிடுகிறார் (கலித்தொகை 34). உதவும் பண்பு, வாழ்வியல் நெறியாகத் திகழ்ந்தது என்பதனை இப்பாடலால் அறியமுடிகிறது.

## வாய்மை

வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்பதனை ,

பொய்யாச் செந்நா (புறநானூறு 168:19)

பொய்படுபு அறியா வயங்குசெந் நாவின்
(பதிற்றுப்பத்து. 58: 9)

என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

'பிழையா நன்மொழி' என்று வாய்மையையும், 'பொய்பொதி கொடுஞ்சொல்' என்று பொய்மையையும் நற்றிணை குறிப்பிடுகிறது. (நற்றிணை. 200).

நிலம்புடை பெயர்வது ஆயினும் கூறிய
சொற்புடை பெயர்தலோ இலரே
(நற்றிணை 289: 2-3)

நிலம்திறம் பெயரும் காலை ஆயினும்
கிளந்த சொல்நீ பொய்ப்பு அறியலையே
(பதிற்றுப்பத்து .63:6-7)

நிலம் பெயரினும் நின்சொற் பெயரல் (புறம்.3:14) முதலான பாடல் அடிகளில் நிலம் புடைபெயர்ந்தாலும் பொய்சொல்லக் கூடாது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

## விருந்தோம்பல்

விருந்தோம்பல், இல்லறத்தாரின் தலையாய கடமையாகும். வீட்டிற்கு வரும் விருந்தினர்களை முகம் கோணாது வரவேற்று உபசரிப்பது தமிழர்களின் உயரிய பண்பாகும். இதனை,

"அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல் இயற் குறுமகள் உறைவின் ஊரே
(நற்றிணை 142: 9-11)

என்று நற்றிணை பாராட்டுகிறது. அமிழ்தமே கிடைத்தாலும் தாம் மட்டும் உண்ணாமல் விருந்தினருக்கும் வழங்கி மகிழ்வர். ஏதுமில்லா நிலையில் விதைத் தினையை உரலில் இட்டு, இடித்து, உணவளித்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது (புறம் 333). விருந்தினருக்கு உணவளிக்க, வரகினைக் கடனாகப் பெற்று வருவதை ஒரு சங்கப்பாடல் காட்டுகிறது (புறம் 327).

உணவிடுவதற்காக ஒருவன் தன் வீரவாளையும் ஈடுவைத்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது (புறம் 316). விருந்தினரின் தொடர்ச்சியான வருகையாலும் அவர்களுக்கு விருந்தோம்புவதாலும் ஒரு தலைவிக்கு ஊடல் கொள்ள நேரமில்லாமல் போனதாக நற்றிணையில் குறிப்பிடப்பட்டுள்ளது (நற். 380). விருந்தோம்பல் கைகூடாத வாழ்க்கையை 'விருந்து கண்டு ஒளிக்கும் திருந்தா வாழ்க்கை' (புறம் 266). எனப் பெருங்குன்றூர்க்கிழார் கூறுகிறார். தமிழர்களின் வீட்டுவாசலில் அமைக்கப்பட்ட திண்ணை, அவர்தம் விருந்தோம்பல் பண்புக்குச் சிறந்த அடையாளமாகக் கருதப்படுகிறது.

## பெண்களின் நிலை

விருந்தோம்பலும் கற்பொழுக்கமும் பெரியோரைப் பேணுதலும் நன்மக்கட்பேறும் இல்லற வாழ்வின் கடமைகளாகும். தன்மகன் மார்பில் விழுப்புண்பட்டு இறந்துகிடப்பதைக் கண்ட தாய், அவனைப் பெற்ற நாளிலும் பெரிதும் உவந்தாள். மற்றொரு தாயோ, 'நின் மகன் யாண்டுளன்' எனத் தன்னிடம் வினவிய பெண்ணிடம் என் மகன் எங்கு இருக்கிறான் என்று எனக்குத் தெரியாது. புலியிருந்து தங்கிச் சென்ற



Unit 3.indd 39 13-02-2020 19:58:15

கற்குகைபோல, அவனை ஈன்ற வயிறு மட்டும் இங்கு உள்ளது. அவனைக் காண வேண்டுமானல், போர்க்களத்தில்தான் பார்க்க முடியும் (புறநானூறு 86: 2-6) என்று கூறினாள்.

மக்கட் பேற்றையும் சமூகக் கடமையாகவே சங்க கால மகளிர் கருதினர். மக்கட் பேறே உயர்ந்த பேறு என்பதை,

மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லை தாம்வாழும் நாளே
(புறநானூறு 188: 6-7)

என்னும் பாடல் கூறுகிறது.

சங்க காலத்தில் ஔவையார், நச்செள்ளையார், நன்முல்லையார், ஆதிமந்தியார், நப்பசலையார், முடத்தாமக்கண்ணியார், காக்கைப்பாடினியார், ஒக்கூர் மாசாத்தியார், பொன்முடியார் முதலான பெண்பாற் புலவர்களின் பாடல்களிலிருந்து சங்ககால மகளிர் கல்வி நிலையிலும் மேம்பட்டு விளங்கினர் என்பதை அறியமுடிகிறது. பெண்கள் பொதுவாழ்க்கையிலும் பங்கேற்றனர் என்பதனை அதியமான் நெடுமான் அஞ்சிக்காகத் தொண்டைமானிடம் ஔவை தூது சென்றதிலிருந்து அறிய முடிகிறது. பாடினி, விறலி முதலானோர் ஆடல் பாடல் கலைகளில் சிறந்து விளங்கினர்.

## சங்க காலம் ஒரு வாழ்வியல் பொற்காலம்

சங்க காலம் பொற்காலமாகத் திகழ்வதற்குப் பல காரணங்கள் இருப்பினும் "எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறம் 187) என்ற ஔவையின் பாடல், 'நாட்டை மேன்மைக்கு உரியதாக மாற்றுவது, அரசனின் மாண்புகளே' என்பதை உணர்த்துகின்றது. சங்ககால மன்னர்கள் கல்வி, வீரம், கொடை, நட்பு, சான்றோரைப் புரத்தல் போன்ற மாண்புகளைப் பெற்றுத் திகழ்ந்தனர்.

## வீரம்

சங்க காலத்தில் ஒருவருக்கொருவர் நாட்டு எல்லைகளைக்காப்பதற்கும்விரிவுபடுத்துவதற்கும் போர்புரிதல் தவிர்க்க முடியாததாக விளங்கியது. போருக்குத் தலைமையேற்று வழிநடத்திச் செல்லவேண்டிய கடமை மன்னனுக்கு இருந்தது. விழுப்புண் தாங்கிப் புறப்புண் நாணும் பண்புடையவர்களாக அரசர்கள் விளங்கினார்கள்.

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்மம்புக் கடிவிடுதும் நும்மரண் சேர்மின்
(புறநானூறு 9: 1-5)



**அறப்போர் முறை**

என்னும் பாடல் வாயிலாகப் பசுக்களும், பார்ப்பனரும், பெண்களும், நோயுற்றவர்களும், மக்கட்பேறு இல்லாதவர்களும் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடுமாறு போர் தொடங்குவதற்கு முன்னர் அறிவுறுத்தினர் என்ற செய்தி புலப்படுகிறது. வீரம் செறிந்த போரிலும் அறநெறி காத்தவர் தமிழர் என்பதற்கு இப்பாடல் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.



Unit 3.indd 40 13-02-2020 19:58:15

## உங்களுக்குத் தெரியுமா?

**காவல் மரம்**

பழந்தமிழ் வேந்தர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு மரத்தைத் தம் வெற்றியைச் சிறப்பிக்கும் மரமாகப் போற்றி வந்துள்ளனர். அம்மரம் இரவு பகலாக வீரரால் காவல் காக்கப்படுவதால், அதற்குக் 'கடிமரம்' எனப் பெயர். அம்மரத்தை வெட்டுப்படாமல் பாதுகாப்பது மானமுடைய வேந்தர்க்கு மறப்பண்பாகும். வேங்கை, புன்னை, வேம்பு முதலிய மரங்களைக் காவல் மரங்களெனப் போற்றி வந்துள்ளனர். வேந்தன் ஒருவன், பகை மன்னனை வெற்றிகொண்டதற்கு அடையாளமாக, அவன் நாட்டுக் காவல் மரத்தை வெட்டி வீழ்த்துவது மரபு.

### கொடை

வீரத்தில் சிறந்து விளங்கிய மன்னர்கள், கொடை வள்ளல்களாகவும் திகழ்ந்தனர். இவ்வள்ளல் தன்மையைப் பாடாண்திணைப் பாடல்கள் விளக்குகின்றன. இவர்களுள் கடையெழு வள்ளல்கள் குறுநில மன்னர்களாயினும், வரையாது பொருள் வழங்கும் இயல்பினர். ஆய் அண்டிரன் என்னும் குறுநில மன்னன், தன்னை நாடிவந்த புலவர்களுக்கு வாரி வழங்கிய யானைகளின் எண்ணிக்கை 'வான்மீன் பல பூப்பினும் ஆனாது மன்னே' என முடமோசியார் என்னும் புலவர் புகழ்கிறார்.

அரசர்கள் தம்மை நாடிவந்த புலவர், பாணன், பாடினி, கூத்தர், விறலி போன்றோர்க்குப் பொருள் கொடுப்பதோடு நின்றுவிடாமல், உடுக்க உடையும், உண்ண உணவும் கொடுத்து மகிழ்ந்தனர். மன்னர்களின் இத்தகைய விருந்தோம்பல், புலவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. இதனைச் சங்க இலக்கியம்,

……மாசுஇல்
காம்புசொலித் தன்ன அறுவை உடீஇப்
பாம்புவெகுண் டன்ன தேறல் நல்கிக்
…., ……. ………. ……….
பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்
…., ……. ……… ……….,
இளங்கதிர் ஞாயிறு எள்ளுந் தோற்றத்து
விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி
ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டித்
(சிறுபாணாற்றுப்படை: 235 – 245)

என்று விவரிக்கிறது.

இதைப் போலப் பதிற்றுப்பத்தில், சேர மன்னர்களது வள்ளல் தன்மையும், விருந்தோம்பல் பண்பும் பெரிதும் பேசப்படுகின்றன. ஆற்றுப்படை நூல்கள், அரசர்களின் வள்ளல்தன்மையைப் பாடுவதற்காகவே உருவாக்கப்பட்டன. மன்னரின் வள்ளல் தன்மை அந்நாட்டு மக்களிடமும் இருந்ததை இவ்விலக்கியங்கள் காட்டுகின்றன.

### அறநெறி போற்றல்

அரசர்கள், புலவர்களைப் பரிசில் பெறுவோராக மட்டும் கருதவில்லை. அறநெறிகூறி வழிநடத்தும் தகுதி உடையவர்களாகவும் கருதினர். இதனைப் பகைநாட்டு மன்னனின் புதல்வர்களை, யானையைக்கொண்டு இடறச் செய்யும் வேளையில், புலவர் சொல்கேட்டு நிறுத்திவிடுதல், புலவரின் அறிவுரைக்கேற்ப வரிவிதிப்பைக் குறைத்துக் கொள்ளுதல், போரைத் தவிர்த்தல், பகைநாட்டு ஒற்றன் எனக் கருதி ஒரு புலவரைக் கழுவேற்றும் வேளையில், மற்றொரு புலவர் சொல்கேட்டு அதை நிறுத்துதல் போன்ற பல்வேறு நிகழ்வுகள், அக்கால மன்னர்களைத் திருத்தும் கடமை, புலவர்களுக்கும் உண்டு என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
………... …………. ………. …………
(புறநானூறு 55: 10)

நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவண்தட் டோரே
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே
(புறநானூறு 18: 28-30)

எனப் புறநானூற்றில் புலவர்கள் பாடியுள்ளனர். இதனால், அரசர்கள் அறநெறியையே முதன்மையாகக்கொண்டு அரசாள வேண்டும்



Unit 3.indd 41 13-02-2020 19:58:15

என்பதும், உழவு செழித்து, உணவு பெருக, நீர்நிலைகளை அமைத்துத் தர வேண்டியது அவர்களின் கடமை என்பதும் உணர்த்தப்பட்டன.

ஏழைப் பெண்ணின் மானம் காக்கத் தன் கையையே வெட்டிக்கொண்ட பொற்கைப் பாண்டியன், அடைக்கலம் புகுந்த புறாவினைக் காக்கத் தன்னையே தராசுத் தட்டில் ஏற்றிய சிபி மன்னன், கன்றிழந்த ஆவின் கண்ணீருக்கு நீதி வழங்கத் தன்மகனையே தேர்க்காலில் இட்ட மனுநீதிச்சோழன் போன்ற அரசர்களின் செயல்கள் நீதிக்குமுன் அனைவரும்சமம்;நீதிவழங்கும்போது தாம், தமர், பிறர் என்ற பாகுபாடு கருதாமல் நீதி வழங்கி, அறநெறி வழுவாது, ஆட்சி புரிய வேண்டும் என்ற விதிமுறைக்குக் கட்டுப்பட்டு அரசாட்சி நடத்தினர் என்பதைப் புலப்படுத்துகிறது.



**பாண்டியன்**

வானம் பொய்ப்பினும், விளைச்சல் குறையினும், எதிர்பாராத இடையூறுகள் தோன்றினும் அரசன் நல்லாட்சி செலுத்தாததே காரணம் எனக் கருதுவது அன்றைய மரபு. இப்பழிச் சொல்லுக்கு அஞ்சி, நல்லாட்சி செலுத்தும் பொறுப்பு மன்னனுக்கு இருந்தது.

மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்
காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்.

(புறநானூறு 35 :27-29)

என்ற பாடலடிகள் இதனை உணர்த்துகிறது.

## பிறர்க்கென வாழ்தல்

சங்கத்தமிழர், பரந்த மனப்பான்மை உடையவராய்த் திகழ்ந்தனர். தந்நலம் கருதாது, பிறர்நலம் பேணும் பெற்றியுடையவராய் விளங்கினர். அனைவரையும் தம் உறவினராகக் கருதும் அவர்தம் மனப்பாங்கை,

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

எனப் பாடிய பூங்குன்றனாரின் புறநானூற்றுப் பாடல்அடி உணர்த்துகிறது. இப்பாடல், கால எல்லை, நில எல்லைகளைக் கடந்து இன்றும் வாழ்கிறது.

'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்''

(புறநானூறு 195: 6-7)

உண்டால் அம்மஇவ் உலகம் – இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே முனிவுஇலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின், உயிரும் கொடுக்குவர் பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்னமாட்சி அனையர் ஆகித்
தமக்குஎன முயலா நோன்தாள்
பிறர்க்குஎன முயலுநர் உண்மை யானே

(புறநானூறு 182)

என்ற புகழ்பெற்ற புறநானூற்றுப் பாடல், சங்ககால மக்களுக்குத் தேவையான பல்வேறு விழுமியங்களை எடுத்துச் சொல்கின்றன. சங்கப் புலவர்கள் அறக்கருத்துகளைப்போதனைகளாகச் சொல்லவில்லை. எளிய சொற்களால் இனிய முறையில் இலக்கியங்களாகப் படைத்தளித்துள்ளனர். எண்ணற்ற போர்கள், அவற்றின் காரணமாக ஏற்படும் உயிரிழப்புகள், கைம்பெண்களின் கையறுநிலை, புலவர்கள்

சித்திரிக்கும் வறுமைநிலை ஆகிய இன்னல்கள் பலவும் சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றையும் எதிர்கொண்டு சிறந்த விழுமியங்களோடு வாழமுடியும் என்பதை உறுதிப்படுத்தியமையே, சங்க இலக்கியங்களின் சிறப்பாகும்.

## பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

பதினெண்கீழ்க்கணக்கு என்பது, பதினெட்டு நூல்களைக் குறிக்கும். அவற்றுள் பதினொரு நூல்கள், அறக்கருத்துகளைக் கூறுவதனால் அறநூல்கள் எனப்படுகின்றன. ஏனையவற்றில் ஆறு நூல்கள் அகப்பொருள் சார்ந்தும், ஒரு நூல் மட்டும் புறப்பொருள் சார்ந்தும் அமைந்துள்ளன.

'நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு''

என்னும் வெண்பா, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களைப் பட்டியலிடுகிறது.

## திருக்குறள் காட்டும் அறம்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய திருக்குறள், சிறந்த அறநூலாகும். உலகம் முழுமைக்குமான வாழ்வியல் நெறிகளை வள்ளுவம் கூறுகிறது. இந்தத்தன்மையால்தான், திருக்குறள் பிறமொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. பொறாமை, பேராசை, சினம், இன்னாச்சொல் ஆகிய நான்கனையும் தீயதெனக் கருதிப் புறந்தள்ளி வாழ்வதே அறம் என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம். (குறள் 35)

இல்லறத்தில் வாழ்பவர்கள் இவ்வறநெறிகளைப் பின்பற்றி வாழ்ந்தால், அவ்வாழ்க்கை துறவறத்தினும் சிறந்தது என்பதனை,

ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து (குறள் 48)

என்கிறார். இல்லறத்தார்க்கு உரிய கடமைகள் பல இருப்பினும், அவற்றுள் முதன்மையானது விருந்தோம்பல் பண்பாகும்.

அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல் (குறள் 84)

நல்ல முக மலர்ச்சியோடு விருந்தினர்களைப் பேணுபவர்கள் இல்லத்தில் செல்வம் நிறைந்திருக்கும் என்பது வள்ளுவரின் நம்பிக்கையாகும்.

தீயவழியில் செல்லாமல் மனத்தை நேர் வழிப்படுத்துவதே அறிவு என்பதும், மன்னுயிரின் துன்பத்தைத் தன்னுயிர்த் துன்பமாகக் கருதுவதே அறிவுடைமை என்பதும் வள்ளுவரின் கருத்தாகும். கல்வியின் பெருமையைக் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை ஆகிய அதிகாரங்களில் குறிப்பிடுகிறார். நல்லனவற்றைப் படிக்க வேண்டும். படித்ததை வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும். அப்படிப்பட்ட கல்வியைப் பெறுபவனுக்கு எல்லா ஊரும் அவன் ஊரே, எல்லா நாடும் அவன் நாடே என்பதனை பின்வரும் குறள் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு. (குறள் 397)

செல்வம் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. அச்செல்வத்தை அறவழியிலேயே சேர்க்க வேண்டும். பண்புடையவரிடம் சேர்ந்த செல்வம், பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தது போலவும், ஊருணியில் நீர்நிறைந்தது போலவும், மருத்துவப் பயன் நிறைந்த மரம் பலருக்கும் பயன்படுவது போலவும் பயன்தரும் என்கிறார்.

அதுபோலவே பண்பில்லாத கொடிய மனம் படைத்தவர் செல்வம், நல்ல பாலானது தான் வைக்கப்பெற்ற பாத்திரத்தால் திரிந்து நஞ்சாவதுபோல மற்றவர்களுக்குக் கேடு விளைவிக்கும் என்கிறார். இங்குச் செல்வத்திற்கென்று தனி இயல்பு கிடையாது, அதனைப் பெற்றிருப்பவரின் இயல்புக்கேற்ப அதன் பயன்பாடு அமைகிறது என்கிறார்.

நல்லவர்களுடைய வறுமை, அவர்களுக்கு



Unit 3.indd 43 13-02-2020 19:58:16

மட்டுமே மிகுந்த துன்பத்தைத் தரும்; ஆனால், தீயவர்களிடம் இருக்கின்ற செல்வமோ மற்றவர்களுக்கும் பல மடங்கு தீமைகளை விளைவிக்கும்.

செல்வம் தவறான இடத்தில் சேர்வதையும் நல்லவர்கள் அல்லல்படுவதையும் காட்டி, வள்ளுவர் இது இப்படித்தான் இருக்கும் என அமைதி அடையவில்லை; மாறாக,

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்

கேடும் நினைக்கப் படும். (குறள் 169)

என்று கூறி அது முறையாக எண்ணிப் பார்த்துக் களையப்பட வேண்டும் என்கிறார்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து

கெடுக உலகுஇயற்றி யான் (குறள் 1062)

என்ற குறள் மூலம் பலர் நோக, சிலர் வாழும் ஏற்றஇறக்கம் கொண்ட வாழ்வை வழங்குவது இறை விருப்பம் என்றால், அந்த இறைவனே தேவையில்லை என்று கூறித் தம் ஆற்றாமையை வெளிப்படுத்துகிறார். சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிரான குரலாகவே இக்குறட்பா விளங்குகிறது.

ஒரு நாட்டின் வளத்தைப் பெருக்குவது அரசின் கடமை. அதற்கான வழிவகையாகப் பொருளை இயற்றல், ஈட்டல், காத்தல் அதனைப் பகிர்ந்தளித்தல் ஆகிய பணிகளைத் திறம்பட செயல்படுத்த வேண்டும் என்கிறார். அரசன் முறைசெய்து காப்பாற்ற வேண்டும். இடித்துரைத்துத் திருத்தும் சான்றோர்களைத் தக்க துணையாகக் கொள்ள வேண்டும். அரசன் முறைதவறி ஆட்சி நடத்தினால் அவன் நாடு கெடும்; வானம் பொய்த்துவிடும்; மக்களை அச்சுறுத்தி, அளவுக்கு அதிகமாக வரிவிதிப்பது அறநெறியாகாது என்கிறார்.

அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, இனியவைகூறல், செய்ந்நன்றி அறிதல் போன்ற நற்பண்புகள் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதன என்று கூறும் திருவள்ளுவர், இத்தகைய வாழ்க்கையைத் தெய்வத்தன்மை பொருந்தியது என்கிறார். இதனை,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்

தெய்வத்துள் வைக்கப் படும். (குறள் 50)

என்ற குறள்வழி அறிய முடிகிறது.

## நாலடியார் கூறும் அறம்

திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்படும் நீதிநூல், 'நாலடியார்' ஆகும். 'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்ற பழமொழி, நாலடியார் திருக்குறளோடு ஒத்த பெருமையுடைய நூல் என்பதை விளக்கும். இந்நூல் சமண முனிவர்கள் பலரால் பாடப்பட்டுப் 'பதுமனார்' என்பவரால் தொகுக்கப்பட்டது. திருக்குறளில் உள்ள கருத்துகள் பலவற்றை நாலடியாரில் காணலாம். துறவறத்தைப் பாராட்டிப் பேசுதல், உலக இன்பத்தை வெறுத்தல், ஊழ்வினை, மறுபிறப்பு, புலால் உண்ணாமை, உயிர்க்கொலை புரியாமை முதலிய சமண சமயக் கொள்கைகளை நாலடியார் வலியுறுத்திக் கூறுகிறது.

## அறிவும் ஒழுக்கமும்

வாழ்க்கை நிலையில்லாதது, செல்வமும் நிலையில்லாதது. எனவே, அறச்செயல்களைக் காலம், இடம் கருதாமல் தொடர்ந்து செய்துகொண்டே இருக்க வேண்டும். கரும்பின் சாற்றைப்போல மற்றவர்க்குப் பயன்படும்படி வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். செல்வத்தை நல்வழியில் சேர்க்க வேண்டும். அச்செல்வத்தைப் பலருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். கற்றறிந்தவர்களுடைய நட்பு, அடிக்கரும்பை உண்பது போலாகும், நற்பண்பும் அன்பும் இல்லாதவர் நட்பு, நுனிக்கரும்பை உண்பது போலாகும்.

களர் நிலத்திலே விளைந்தாலும் உப்பை, நல்ல விளைநிலத்தில் பிறந்த நெல்லுக்கு இணையாகவே கருதுவர். பிறப்பைக்கொண்டு மட்டும் ஒருவரை உயர்ந்தவராகவோ, தாழ்ந்தவராகவோ கருதிவிடக்கூடாது. எங்குப் பிறந்தவராயினும் கற்றறிந்தவரே சிறந்தவர். அறிவும் ஒழுக்கமுமே மக்களுக்கு மதிப்பைத் தருவன என்ற சிறந்த கொள்கைகளை நாலடியார் எடுத்துரைக்கின்றது.



Unit 3.indd 44 13-02-2020 19:58:16

களர்நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்;
கடைநிலத்தோ ராயினும் கற்றறிந்தோரை
தலைநிலத்து வைக்கப் படும்.

(நாலடியார் 133)

அறிவுத்தெளிவில்லாதவர்களுடைய நட்பைவிட, அவர்களின் பகையே நல்லது. எவ்வகை மருந்தினாலும் தீர்க்க முடியாத நோய் கொடுமையானது. ஒருவரிடம் இல்லாத பெருமைகளைக் கூறிப் புகழ்வதைவிட, அவரைப் பழித்தலே நல்லது போன்ற எளிய கருத்துகள் வாயிலாக நாலடியார் மனிதர்களின் மனத்தைப் பண்படுத்துகிறது.

## பிற்கால அறநூல்கள்

திருக்குறள் முதலான அறநூல்களுக்குப் பின்னரும், அறக்கருத்துகளை எடுத்துரைக்கும் பல நூல்கள் தோன்றியுள்ளன. ஔவையார் பாடிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி ஆகியன அறம் உரைக்கும் நூல்கள். அவரைத் தொடர்ந்து, பலர் நீதிநூல்களை இயற்றியுள்ளனர். வெற்றிவேற்கை, நீதிநெறி விளக்கம், அறநெறிச்சாரம், நீதி வெண்பா முதலானவை அவற்றுள் சிலவாகும். ஔவையாரைப் பின்பற்றிப் பலர் ஆத்திசூடி இயற்றியுள்ளனர். பாரதியார், பாரதிதாசன் ஆகியோரின் புதிய ஆத்திசூடிகள், மாணாக்கர்களுக்குப் பாடமாகவும் பயிற்று விக்கப்படுகின்றன.

## நன்னூல் கூறும் அறம்

தொல்காப்பியத்தின் வழிநூலாக விளங்கும் இலக்கணநூல், நன்னூல். பவணந்தி முனிவரால் இயற்றப்பெற்ற இந்நூலில் எழுத்து, சொல் என இரு அதிகாரங்கள் உள்ளன. இந்நூலின் பொதுப்பாயிரம், நூலைப்பற்றியும் நல்லாசிரியர், நல்லாசிரியர் ஆகாதவர், நல்ல மாணாக்கர், நன்மாணாக்கர் ஆகாதவர் இயல்புகள் பற்றியும் கூறியுள்ளது. மேலும் ஆசிரியர், நூலை மாணாக்கர்க்குக் கற்பித்தல், மாணாக்கர் கற்றுக்கொள்ளல் ஆகியன குறித்தும் விளக்கியுள்ளது.

## நல்லாசிரியர் இயல்புகள்

ஆசிரியர் என்பவர், அருட்குணம் உடையவராகவும், பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தவராகவும், தாம் கற்றதை மாணாக்கருக்கு எளிதாகப் புரியும்வண்ணம் எடுத்துச் சொல்லும் சொல்வன்மை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

## ஆசிரியர் ஆகாதவர் இயல்புகள்

மாணவர் எளிதில் உணரும் வண்ணம் பாடத்தை விரித்துரைக்கும் திறமையில்லாதவர், இழிவான பண்புகள் உடையோர், மாணவரின் கற்றல் திறனைக்கண்டு பொறாமைப்படுபவர், பொருளாசை மிக்கோர், தவறாக வழி நடத்துபவர், மாணவர் மனத்தில் அச்ச உணர்ச்சியை உண்டாக்குபவர் போன்றோர் ஆசிரியர் ஆகும் பண்பில்லாதவர்கள்.

## நன்மாணாக்கர் இயல்புகள்

- அல்லதை நீக்கி நல்லதை நாடும் இயல்புடையோர், ஆசிரியர் கூறுவதை மனத்தில் நிறுத்தி, மீண்டும் மீண்டும் நினைவுகூர்ந்து சிந்திப்பவர் ஆகியோர் தலைமாணாக்கர்.

- தாம் கற்றுக் கொண்டதையே திருப்பிச் சொல்லும் இயல்புடையோர் இடை மாணாக்கர்

- கற்றவற்றை மறந்துவிடுபவர், கற்பதில் முழுமையாகக் கவனம் செலுத்தாமல் மனம் அலை பாய்ந்து கொண்டிருப்பவர், ஆசிரியரை வருத்திப் பாடம் கேட்கும் இயல்புடையவர், கற்பனவற்றில் உள்ள நற்கருத்துகளை மறந்துவிட்டுத் தீய கருத்துகளைப் பற்றிக்கொள்பவர் ஆகியோர் கடை மாணாக்கர்.

## மாணாக்கர் ஆகாதவர் இயல்புகள்

கள் உண்பவன், சோம்பேறி, செருக்கு உடையவன், காமம் கொண்டவன், திருடன், நோயாளி, அறிவில்லாதவன், மாறுபாடு உடையவன், சினங்கொள்பவன், மிகுநேரம் உறங்குபவன், அறிவுநுட்பம் இல்லாதவன், பழைய நூல்களைக் கண்டு அஞ்சித் தடுமாறும் உள்ளம் படைத்தவன்,



Unit 3.indd 45 13-02-2020 19:58:16

அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சாதவன், தீயசெயல் புரிபவன், பொய் பேசுபவன் ஆகியோரை மாணாக்கர் ஆகாதவர்கள் என நன்னூல் குறிப்பிடுகிறது.

### ஆசிரியர் மாணாக்கர் உறவு

நெருப்பில் குளிர் காய்வதுபோல ஆசிரியர் மாணாக்கர் உறவு என்பது, அகலாமலும் அணுகாமலும் இருத்தல் வேண்டும். கற்றல் கற்பித்தல் பணி சிறக்க இத்தகைய உறவு முறையே சிறப்பானது என்பது நன்னூலார் கருத்தாகும்.

### நூலின் மாண்பு

அறியாமை நீக்கி, அறிவை வளர்த்து மனிதரின் மனக்கோணலை நீக்குவதையே நூலின் மாண்பாக நன்னூலார் கருதுகிறார். (பொதுப்பாயிரம் – 25)

### கற்றல் முறைமை

ஒரு முறைக்குப் பலமுறை படித்தாலே முழு அறிவு கிடைக்கும் என்பதே நன்னூல் கருத்தாகும். "ஆசிரியர் கூறுவதை அப்படியே உள்வாங்கிக் கொண்டால் கால்பகுதி அறிவே கிடைக்கும். உடன் பயில்வோருடன் அதுபற்றி உரையாடினால் கால்பகுதியும், உடன் பயிலும் மாணக்கருக்கும் கற்றோர் நிறைந்த அவையிலும் விரித்து உரைக்கும்போது மீதி அரைப்பகுதியுமாக அறிவு நிறைவுடையும்" என முழு அறிவு பெறுவதற்கான நெறிமுறைகளை நன்னூல் எடுத்துரைக்கிறது.

நூலில் தாம் கற்றறிந்தவற்றில் உள்ள கற்பனையையும் நடைமுறையையும் ஆய்ந்து தெளிதல், படித்தவற்றைப் பலமுறை சிந்தித்தல், கேட்டறிந்தவற்றை ஒப்பிட்டுப் பார்த்தல், ஆசிரியருடன் அதைப் பகிர்தல், கல்வியில் விருப்பமுள்ள மாணவருடன் பழகுதல், ஐயப்பாடுகளைக் கூடிப்பேசிக் களைந்து கொள்ளுதல் போன்றவற்றைத் திறம்படக் கற்றலுக்கான வழிவகைகளாக நன்னூல் கூறுகிறது.

### சிலப்பதிகாரமும் மணிமேகலையும்

காப்பிய மரபில், முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கும் சிலப்பதிகாரம், தமிழ்ப் பண்பாட்டையும் வாழ்க்கை முறையையும் கலைகளையும் சிறப்பாகப் பதிவுசெய்துள்ளது. சிலப்பதிகாரத்தின் தலைமை மாந்தர்களான கோவலனும் கண்ணகியும், பூம்புகார் நகரத்தில் பெருவணிகக் குடும்பத்தில் பிறந்தவர்கள். கோவலன் பல கலைகளைக் கற்றவன், உயர் பண்புடன் திகழ்ந்தவன்.

கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த பெண்குழந்தைக்குப் பெயர் சூட்டும் தருணத்தில், 'ஒரு சமயம் என் மூதாதையர் ஒருவர் நடுக்கடலில் சென்றபோது மரக்கலம் உடைந்து அலைகடலில் தவிக்க, மணிபல்லவத்தீவில் வாழும் பெண் தெய்வம் கரை சேர்த்தது. ஆதலால், என் முன்னோரைக் காப்பாற்றிய 'மணிமேகலா' என்ற தெய்வத்தின் நினைவாக மணிமேகலை என்னும் பெயரை என் மகளுக்குச் சூட்டுக' எனக் கோவலன் கூறினான். இக்கூற்று கோவலன் செய்ந்நன்றி மறவாப் பண்பினன் என்பதைப் புலப்படுத்துகிறது.



**யானையிடமிருந்து முதியவரைக் காத்த கோவலன்**

கோவலன் யானையிடமிருந்து முதியவரைக் காத்த கருணை மறவனாகவும், பிரிந்த கணவன் மனைவியைப் பெரும்பொருள் கொடுத்து இல்லற வாழ்வில் இணைத்து வைத்த செல்லாச் செல்வனாகவும், தலைவனை இழந்து தடுமாறும் குடும்பத்தாரையும் அவர்தம் சுற்றத்தாரையும் ஆறுதல் கூறி அரவணைத்த 'இல்லோர் செம்மலாகவும்' மாடல மறையோனால் புகழப்படுகிறான். இத்தகைய மேம்பட்ட



Unit 3.indd 46 13-02-2020 19:58:16

பண்புகளை உடைய கோவலன், காதல் மனைவி கண்ணகியை மறந்து, மாதவி என்ற கணிகையோடு வாழ்கிறான். முன்னோர் தந்த செல்வம் அனைத்தையும் இழந்த பின்பு, கண்ணகியோடும் அவள் காற்சிலம்போடும் புதிய வாழ்வு தேடிப் பூம்புகாரை விட்டுப் புறப்படுகிறான்.

மதுரை மாநகரில் மாதரியிடம் அடைக்கலம் புகுந்து காற்சிலம்பை விற்கச் செல்லும் வேளையில், கோவலன் தன் தவறை உணர்ந்து கண்ணகியிடம் வருந்தி, "கற்கள் நிறைந்த கானகத்தில் நடந்துவரும் துன்பத்தை உனக்குக் கொடுத்தேன். பெற்றோர்களுக்கும் துன்பத்தைக் கொடுத்தேன்; பொழுதைப் பயனின்றிக்கழிப்பவர்களோடும்,காமுகர்களோடும் கூடித்திரிந்து பிறர் பழிச்சொல்லுக்கும் ஆளானேன்; நல்லோர் கூறிய அறநெறி துறந்த எனக்கு நற்கதி உண்டா? பெற்றோருக்கு ஆற்ற வேண்டிய கடமையையும் ஆற்றவில்லை. உனக்கும் துன்பம் செய்தேன்" என்று புலம்புகிறான். மேலும் பரத்தமை தவிர பயனில பேசுவோருடன் பழகிப் பொழுதை வீணே கழித்துக் குன்றமன்ன வான்பொருள் தொலைத்துவிட்டதையும் கூறி வருந்துகிறான். இதனால், அவனைப் 'போற்றா ஒழுக்கம் புரிந்தீர்' எனக் கண்ணகியும் குற்றம் சாட்டுகிறாள்.

கோவலனின் ஒழுக்கப் பிறழ்வு, களவுப்பழி சுமந்து, அவன் உயிரிழக்கக் காரணமாக அமைகிறது. நற்குடிப் பிறப்போ, பெருஞ்செல்வமோ ஒழுக்கம் பிறழ்ந்தவனைக் காப்பாற்ற உதவாது என்பதைப் புலப்படுத்துவதாகக் கோவலனின் வாக்குமூலம் அமைகிறது. கோவலனின் ஒழுக்கப் பிறழ்வு அவன் இல்லறத்தைச் சிதைக்கிறது; பெற்றோரைத் துறவுக்குத் தள்ளுகிறது; மாதவியைத் தீக்குளிக்கச் செய்கிறது; கவுந்தியடிகளை வடக்கிருந்து உயிர்விடச் செய்கிறது, பாண்டியனைக் கொன்று மதுரையைத் தீக்கிரையாக்குகிறது. தனிமனித ஒழுக்கக் கேடு சமுதாயத்தைச் சீர்குலைக்கும் என்பதை கோவலனின் பாத்திரப்படைப்பு வாயிலாக இளங்கோவடிகள் வெளிப்படுத்துகிறார்.

## அரசநீதி

சிலம்பு, பல கருத்துகளைக் கூறினாலும் வழக்குரை காதை மூலம் தமிழ் மன்னர்களின் நீதி வழுவாத அறச்சிறப்பினைப் பதிவுசெய்கிறது. அரசிக்குரிய பொற்சிலம்பினைத் திருடினான் என்று குற்றம் சுமத்தப்பட்டுக் கோவலன் கொல்லப்பட்டான். இச்செய்தி அறிந்த கண்ணகி, பாண்டியனிடம் தன் கணவன் கள்வன் அல்லன் என்பதைச் சான்றுடன் மெய்ப்பித்தாள். பாண்டியன் தன் தவற்றை உணர்ந்து,



**பாண்டிய மன்னனிடம் நீதி கேட்கும் கண்ணகி**

'யானோ அரசன் யானே கள்வன்" எனக்கூறி உயிர்விட்டான். இச்செய்தியைச் செவிவழியாகக் கேள்விப்பட்ட சேரமன்னன், 'பாண்டிய மன்னன், தனது வளைந்துவிட்ட தனது செங்கோலை உயிரைத் துறந்து நேராக்கினான்' என்று கூறுகிறான். இதிலிருந்து, தமிழ் மன்னர்களின் நீதி தவறாத ஆட்சிமுறை புலப்படுகிறது.

மழை பொய்த்தாலோ, குடிமக்கள் தவறிழைத்தாலோ, மன்னனையே பழிப்பர், குடிமக்களைப் பசி, பிணி ஆகியவற்றினின்று பாதுகாத்தலும், கொடுங்கோலன் என்ற பழிச் சொல்லுக்கு அஞ்சியும் மன்னர்கள் ஆட்சி நடத்த வேண்டியிருந்தது என்பதை,

மழைவளம் கரப்பின் வான்பேர் அச்சம்
பிழையுயிர் எய்தின் பெரும்பேர் அச்சம்
குடிபுரவுண்டும் கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்



Unit 3.indd 47 13-02-2020 19:58:17

## உங்களுக்குத் தெரியுமா?

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில், (அடைக்கலக் காதை 76- 85) கற்பனையாக ஒரு காட்சியை அமைக்கிறார். அஃது என்னவென்று தெரியுமா? அது சதுக்கபூதம் என்பதுதான். அதில், பூதம் ஒன்று அறவழியிலிருந்து விலகுபவரைத் தண்டிக்குமாம். யாரையெல்லாம் தண்டிக்கும்?

கூடாவொழுக்கத்தில் ஒழுகும் போலித்துறவியர், தீநெறியில் ஒழுகும் பெண்டிர், பிறர் மனை நயப்போர், பொய்ச்சான்று பகர்வோர், புறங்கூறுவோர் ஆகியோரைக் கண்டால், பாசத்தாற் (பாசக்கயிறு) கட்டி, நான்கு காதம் சுற்றளவுவரை கேட்குமளவு கடுங்குரல் எழுப்பி, நிலத்தில் புடைத்து, உண்டுவிடும்.

ஒருமுறை, வறியோன் ஒருவன் உண்மையறியாது கற்புடைய மங்கையைப்பற்றி, அவள் கணவனிடம் பொய்ச்சான்று கூறிவிட்டான். அதுகண்ட பூதம், அவனைப் புடைத்து உண்பதற்காகக் கயிற்றில் பிடித்து வைத்திருந்தது. அந்நிலையில் அவன் தாய் அழுது, புரண்டு தன் மகனை விட்டுவிடுமாறும் அதற்குப் பதிலாகத் தன் உயிரை எடுத்துக்கொள்ளுமாறும் வேண்டினாள். அதற்குப் பூதமானது, 'நரகன் உயிருக்குப் பதில், நல்ல உயிரைக்கொண்டு மேலான கதியை இழக்கும் தன்மை எனக்கு இல்லை, உன் எண்ணத்தைக் கைவிடு' என்று கூறிய பூதம், பொய்சாட்சி பகன்றவனைப் புடைத்து உண்டது.

"நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி இழக்கும் பண்பீங் கில்லை"

(சிலம்பு, அடைக்கலக்காதை, 84,)

இந்தச் செய்தி கற்பனையாக இருந்தாலும், அறவழியிலிருந்து விலகாமல் மக்களை நெறிப்படுத்துகிறது.

துன்பம் அல்லது தொழுதகவு இல்.
(சிலப்பதிகாரம்–வஞ்சிக்காண்டம்- காட்சிக்காதை,100-104)

என்ற சிலப்பதிகார அடிகள் உணர்த்துகின்றன.

மணிமேகலை, அரசன் நீதி வழங்கும் முறையைப் பற்றிப் பேசுகிறது. மணிமேகலையைப் பின்தொடர்ந்த உதயகுமாரன், காயசண்டிகையின் கணவன் காஞ்சனனால் கொல்லப்படுகிறான். இதைக் கேட்ட உதயகுமாரனின் தந்தை, "அரசனது காவல் இல்லாமையால் மாமுனிவர் தவமும் மகளிர் கற்பும் இல்லையாகும், கன்றை இழந்த பசுவின் துயரத்தைப் போக்க, தன்மகனைத் தேர்க்காலில் இட்டு முறைசெய்த மனுநீதிச் சோழனின் மரபில் ஒரு தீவினையாளன் தோன்றினான் என்னும் இச்செய்தி, பிற வேந்தரின் காதில் புகுவதற்கு முன்பு உதயகுமாரன் உடலை ஈமத்தீயில் ஏற்றி விடுக" என்கிறான்.

மனித சமுதாயத்திற்கு அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை வழங்குவதே அறம் என்பதனை,

அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள்; மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டதில்
(மணிமேகலை, ஆபுத்திரனோடு
மணிபல்லவமடைந்த காதை; 227- 230)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. உலகில் நடைபெறும் பல குற்றச் செயல்களுக்குப் பசிப்பிணியே காரணம் என்பதை உணர்ந்து அதைப்போக்குவதன் மூலம் குற்றச்செயல்களைத் தடுக்கமுடியும் என்பது, மணிமேகலையின் மையப்பொருளாகும். அரசனுக்கு நிகரான செல்வச்செழிப்பு மிக்க கோவலன் ஒழுக்கக்கேட்டினால் தானும் அழிந்து தன் சுற்றத்தையும் அழிக்கிறான். 'கணிகைமகள்' எனச் சோழ மன்னனால் குறிக்கப் பெற்ற மணிமேகலை, ஒழுக்கத்தின் உயர்வினால்



Unit 3.indd 48 13-02-2020 19:58:17

தன்னையும் வென்று, நாட்டையும் நல்வழிப்படுத்திச் சான்றோர் போற்றும் காப்பியத் தலைவி என்னும் உயர்நிலையை அடைகிறாள்.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி (குறள் 137)

என்ற குறளுக்கு இலக்கணமாக இவ்விரு காப்பியங்களும் திகழ்கின்றன.

### சீவக சிந்தாமணி

தமிழில் விருத்தப்பாவில் தோன்றிய முதல் காப்பியம் சீவக சிந்தாமணி. இது சமண சமயக் கருத்துகளைத் தொகுத்துக் கூறுகிறது. திருத்தக்கதேவர் ஒரு சோலையில் நடந்த காட்சியின் மூலம் 'நிலையாமை' என்னும் கருத்தை விளக்குகிறார். கடுவன் ஒன்று பெண் குரங்கிற்குப் பலாப்பழத்தை நகத்தால் கீறிப் பிளந்து, நல்ல சுவைமிக்க சுளையைக் கொடுத்தது. அதனை மந்தி வாங்கியது. அந்நேரத்தில் இரண்டு குரங்குகளையும் அடித்துத் துரத்திவிட்டுத் தோட்டக்காரன் பலாப் பழத்தைப் பறித்துக்கொண்டான்.

இந்நிகழ்ச்சியைக் கண்ட சீவகன், தன் தந்தை சச்சந்தனிடம் இருந்து கட்டியங்காரன் தங்களது நாட்டைப் பறித்துக் கொண்டதையும் அவனிடமிருந்து தான் தனது நாட்டை மீட்டதையும் நினைவுகூர்கிறான். மெலியவனிடமிருந்து வலியவன் நாட்டைக் கைப்பற்றுதல் தொடர்ந்து நடப்பதும் அரச அதிகாரமோ செல்வமோ நிலையானதல்ல என்ற எண்ணமும் அச்சமயத்தில் அவனுக்கு ஏற்பட்டு அரச பதவியைத் துறந்து விடுகிறான்.

அரசன், அமைச்சரைப் பலமுறை ஆராய்ந்து தெளிய வேண்டும்; பகையை வெல்லக் கருதினோன் உரிய காலமும் இடமும் வாய்க்கும்வரை தன் எண்ணத்தை வெளிப்படுத்தாமல் காத்திருக்க வேண்டும்; பிற உயிர்களுக்குத் துன்பம்வரின் அதைப் போக்க முயல வேண்டும்; தான் வருந்தும்படி நேரினும் தனக்குப் பகையல்லாதவரைச் சிறிதும் வருத்துதல் கூடாது; தாய் தந்தை சொல்லை மதித்து நடத்தல் வேண்டும்; எல்லா உயிர்களிடத்தும் எப்பொழுதும் அருள் உடையவனாக இருத்தல் வேண்டும்; பாத்திரம் அறிந்து தானம் செய்தல் வேண்டும்; தீயவழிச் செல்வோரைக் காணின், இரங்கி உடனே அவரை நல்வழிப்படுத்த முயல வேண்டும் போன்ற அறச்செயல்களை விளக்கும் காப்பியமாகச் சீவக சிந்தாமணி திகழ்கிறது.

### வளையாபதி, குண்டலகேசி

பொய் கூறாதீர்; புறங் கூறாதீர்; யாரையும் இகழ்ந்து பேசாதீர்; தீயவற்றைப் பேசி உடல் வளர்க்காதீர்; உயிர்க்கொலை செய்து அதன் ஊனை உண்டு உங்கள் உயிரை வளர்க்க எண்ணாதீர்; கள்வருடன் நட்புக் கொள்ளாதீர்; களவு கொள்ளாதீர்" எனப் பல அறங்களை வளையாபதி தொகுத்துக் கூறுகிறது.

இளமையும் நிலையானது அன்று; அனுபவிக்கும் இன்பமும் நிலையானது அன்று; செல்வமும் நிலையானது அன்று; நாள்தோறும் துன்ப வெள்ளமே மிகுதியாக உள்ளது. அதனால், இளமையும் இன்பமும் செல்வமும் நம்மிடம் உள்ளது எனக் கருத வேண்டா. உழவர்கள், தாம் விளைவித்த விளைச்சலில் ஒரு பகுதியை விதையாகச் சேமிப்பதுபோல மறுபிறவிக்கு நாள்தோறும் அறம் செய்ய வேண்டும். வாழ்க்கை நிலையில்லாதது, எனவே, அறம் ஒன்றே நிலைத்து நிற்கும் என்பதே வளையாபதி காட்டும் அறமாகும்.

நாம், தாயாரின் வயிற்றில் கருவாகி இருந்த நிலை முதற்கொண்டு பருவங்கள் பலவற்றைக் கடந்து மூப்படைகிறோம்; இறுதியில் இறக்கப்போகிறோம் என வாழ்வின் நிலையாமை குறித்து

பாளையாம் தன்மை செத்தும்
பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும்
காமுறும் இளமை செத்தும்
நாளும் நாள் சாகின்றோ மால்
நமக்கு நாம் அழாதது என்னோ

(குண்டலகேசி -9)



Unit 3.indd 49 13-02-2020 19:58:17

என்ற குண்டலகேசி காப்பியப் பாடல் எடுத்துக் கூறுகிறது.

## கம்பராமாயணம்

சோழப்பேரரசு எழுச்சிபெற்ற காலத்தில் தோன்றிய காப்பியம் கம்பராமாயணம். தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காகத் தன் உயிரனைய மகனைப் பிரியும் தந்தை தசரதன், தந்தை சொல் தவறாமல் அரச பதவியைத் துறந்து காட்டுக்குச் செல்லும் இராமன், முறை தவறிக் கிடைத்த அரசபதவியை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடும் இளவலாகிய பரதன், நட்பிற்காக உயிரையும் துறப்பேன் என்று சொல்லும் குகன், விருந்தோம்பலுக்கு இலக்கணமாகத் திகழும் சபரி, பிரிவினும் பெருங்காடு சுடுமோ? எனக் கணவனைத் தொடரும் சீதை; அண்ணனைப் பாதுகாப்பதே தனது இலக்கு என வாழும் பாசமிக்க இளவல் இலக்குவன்; கொண்ட பணியை முடிக்க, கடலாயினும் மலையாயினும் எதையும் கடக்கத் தயாராகும் தொண்டுள்ளம் கொண்ட அனுமன் முதலான நற்பண்பாளர்களை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. .



**இராமனுக்கு விருந்து படைக்கும் சபரி**

ஏகம் முதல் கல்வி முளைத்து எழுந்து, எண்இல்
கேள்வி ஆகும் முதல் திண்பணை போக்கி,
அருந்தவத்தின்
சாகம் தழைத்து, அன்பு அரும்பி, தருமம் மலர்ந்து,
போகம் கனி ஒன்று பழுத்தது போலும் அன்றே.

(கம்பராமாயணம்: பாலகாண்டம் (நகரப்படலம் : 75)

இங்குக் கல்வி என்னும் வித்து, முளைத்து மேலெழுகிறது; எண்ணற்ற பல நூல் கேள்வியாகிய கிளைகளைப் பரவச் செய்கிறது; அரிய தவமாகிய இலைகளோடு தழைக்கிறது; பல உயிர்களிடத்தும் செலுத்தும் அன்பாகிய அரும்புகளோடு அம்மரம் முகிழ்க்கிறது; அறச்செயல்களாகிய மலர்களோடு விளங்குகிறது; இன்ப அனுபவம் என்ற பழங்கள் பழுத்த மரமே அயோத்தி மாநகர் எனச் சிறப்பிக்கப்படுகிறது. கல்வியால் அடக்கம் - அடக்கத்தால் நல்வாழ்வு - நல்வாழ்வால் பொருள் - நல்வழியில் பெற்ற அப்பொருளால் அறம் - அவ்வறத்தால் இன்ப அனுபவம் கிடைக்கும், கல்வியே அனைத்து அறத்திற்கும் அடிப்படை என்பது கம்பனின் உறுதிப்பாடு. இவ்வளவு சிறப்பு மிக்க அயோத்தி மாநகரில் பிறந்த இராமன் நற்பண்புகளின் இருப்பிடமாகத் திகழ்ந்தவன்.

இராமாயணத்தில் இராவணன், பல நல்ல குணங்களைப் பெற்றவனாகக் காட்டப்படுகிறான். அவன் இசையில் வல்லவன், சிறந்த சிவபக்தன், தோள் வலிமை உடையவன், எட்டுத்திக்கு யானைகளுடன் போரிட்டு மார்பில் விழுப்புண் பெற்று வெற்றி கண்டவன், அதோடு தன் தமையன் செய்த தவற்றையும் இடித்துரைக்கத் தயங்காத துணிவு மிக்கவனாகச் செஞ்சோற்றுக் கடனுக்காக உயிரையும் துறக்கத் துணிந்த கும்பகர்ணனையும், தந்தை சொல்லுக்குக் கட்டுப்பட்டுப் போரில் ஈடுபடும் இந்திரஜித்து, மேகநாதன் போன்ற வீரமிக்க புதல்வர்கள் முதலானாவர்களையும் தனது சுற்றமாகக் கொண்டவன்.

செல்வ வளத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழும் நாடும் கொற்றமும் சுற்றமும் உடைய அவன், கெட்டு ஒழியப் பிறன்மனை நயத்தலாகிய அறமற்ற செயலே காரணமாகிறது.



Unit 3.indd 50 13-02-2020 19:58:17

## வில்லிபாரதம் காட்டும் அறம்

இந்திய மொழிகள் அனைத்திலும் காணப்படும் இதிகாசங்களுள் ஒன்று மகாபாரதம். வடமொழியில் வியாசர் இயற்றிய பாரதத்தை அடிப்படையாகக் கொண்டு மற்ற மொழிகளில் பாரதக் கதைகள் இயற்றப்பட்டன. தமிழில் வழங்கப்படும் பாரதக் கதைகளில் வில்லிபுத்தூரார் பாரதமும் ஒன்று.

போட்டி, பொறாமை, சூது போன்ற அறத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுபவர் தோல்வி அடைவர்; அதற்கு மாறாகச் சான்றோர் வகுத்த நெறியில் நிற்போர் அறவழியில் வெற்றி பெறுவர். நன்மை வெல்லும்; தீமை தோற்கும் என்பதே இதன் மையக்கருத்து. உறவினர்க்கு இடையே ஏற்படும் பொறாமைப் பண்பானது, வஞ்சகம், துரோகம் போன்ற இழி செயல்களுக்கு இட்டுச் சென்று போரில் ஈடுபட வைக்கிறது. அதுவே அழிவிற்குக் காரணமாக அமைகிறது. இதனை,

**அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்**
**தீயுழி உய்த்து விடும்** (குறள் 168)

என்ற திருக்குறள் உணர்த்துகிறது.

எத்தனையோ இடர்ப்பாடுகள் வந்தபொழுதும் தருமன், அறத்தின் மீது மாறாப்பற்றையும், ஒற்றுமையின் வலிமையையும் நிலைநிறுத்துகிறான். பாண்டவர்கள் ஐவரும் வெவ்வேறு சூழல்களில் பிறந்தனர். இருப்பினும் சிறுவயது முதலே ஒற்றுமையாக வளர்ந்தனர். பலராலும் போற்றப்படும் நற்பண்புகள் உடையவர்களாகத் திகழ்ந்தனர். பீமனது வலிமையாலும், அருச்சுனனது வில்லாற்றலாலும் வெற்றி பல கண்டனர். இதனால் பொறாமை கொண்ட துரியோதனின் சூழ்ச்சியால் சூதாட்டத்தில் தோற்றனர். அதனால், வனவாசத்திலும் மறைவாசத்திலும் துன்பப்பட்டனர். போர்க்களத்தில் தம் புதல்வர்களை இழந்தனர். இத்தகைய சூழல்களிலும் ஒற்றுமையாக இருந்து இறுதியில் வெற்றி பெற்றனர்.



**பஞ்சபாண்டவர்கள்**

திருதராட்டிரனின் நூறு புதல்வர்களும் கௌரவர்கள் ஆவர். அவர்களுள் மூத்தவன் துரியோதனன். தன் தீயகுணங்களால் துன்பத்திற்கு ஆளாகிறான். "தீங்கொரு வடிவமாம் திறன் சுயோதனன்" என்று துரியோதனனை வில்லிபுத்தூரார் அறிமுகப்படுத்துகிறார். துரியோதனன் பாண்டவர்களிடம் சிறுவயது முதலே பகைமையை வளர்க்கிறான். இவன் பேராசையால் நாட்டைப் பாண்டவர்களுக்குப் பகிர்ந்தளிக்க விரும்பவில்லை. துரியோதனன், சூழ்ச்சி, வஞ்சம், பெண்மையை இழிவுபடுத்துதல், பெரியவர்களை அவமதித்தல் ஆகிய தீய குணங்களைப் பெற்றிருந்தான். எனவே, அழிவைச் சந்தித்தான். துரியோதனன், விதுரன் உள்ளிட்ட சான்றோர்களின் அறிவுரைகளையும் தருமன், பீமனின் இடித்துரைகளையும் புறக்கணித்தான். பீஷ்மர், துரோணர், கிருபர், கர்ணன், விதுரர் முதலிய சான்றோர்கள் போர்க்களத்தில் துரியோதனன் பக்கம் நின்றனர். இருப்பினும் சகுனியின் கூடா நட்பின் காரணமாக அறமல்லாச் செயல்களில் ஈடுபட்டதனால் இறுதியில் தோல்வியையும் மரணத்தையும் தழுவினான்.

வில்லிபாரதம், 'பொறுமை' என்னும் அறத்தைத் தருமன் மூலமாக வெளிப்படுத்துகிறது. நடுநிலைமையாக அறவழியில் செல்லக்கூடிய பொய்மை கூறாத பண்புள்ளவனாகத் தருமன் திகழ்கிறான். அசுவத்தாமன் போரில் இறந்துவிட்டதாகப் பொய் உரைக்கும்படி கண்ணன் தருமனிடம் கூறுகிறான். இதை மறுக்கும் தருமன் இல்வாழ்க்கைத் துணை, சான்றோர்கள்,



Unit 3.indd 51 13-02-2020 19:58:18

நெருங்கிய உறவினர்கள், அன்பு, நிலையான புகழ், மிகுந்த செல்வம், திறமை, அறிவு இவற்றால் கிடைக்கும் பொருட்கள், தவம், புண்ணியம் ஆகியன பொய் உரைப்பதால் அழிந்துவிடும் என்று கூறுகிறான் (பாடல் 3687).

கண்ணன் பாண்டவர்களுக்காகத் துரியோதனனிடம் தூது செல்கிறான். அப்பொழுது விதுரனின் மாளிகையில் தங்குகிறான். அதற்கான காரணத்தைத் துரியோதனன் வினவ கண்ணன்,

……………… மதி அமைச்சர்
ஆய் அரசு அழிப்பினும்
குரவர் நல் உரை மறுக்கினும் பிறர்
புரிந்த நன்றியது கொல்லினும்
ஒருவர் வாழ் மனையில் உண்டு பின்னும்
அவருடன் அழன்று பொர உன்னினும்
இரவி உள்ளளவும் மதியம் உள்ளளவும்
இவர்களே நரகில் எய்துவார்.

(வில்லிபாரதம் 2445)

என்று கூறுகிறான். “நல்லறிவுடைய அமைச்சராய் இருந்து அரசாட்சியை வேண்டுமென்றே கெடுத்தலும், சான்றோர் மொழியைப் புறக்கணித்தலும், பிறர் செய்த உதவியை மறத்தலும், ஒருவர் வாழும் வீட்டில் உணவு உண்டு, அவருடனே சினந்து போர் செய்ய நினைத்தலும் ஆகிய இந்நான்கு செயல்களையும் செய்பவர்கள் சூரிய சந்திரன் உள்ளவரை துன்பம் அனுபவிப்பர்” என்று அவன் கூறும் விளக்கம் எக்காலத்திற்கும் பொருந்தும் அறமாகும்.

சூதாட அழைத்த துரியோதனனுக்கு மறுமொழியாகத் தருமன் சினம் கொள்ளுதல், மற்றவரின் குற்றங்களை எடுத்துக் கூறித் தூற்றுதல், ஒருவரிடம் முதலில் நட்புக் கொண்டு பின்பு அவரிடம் ஐயம் கொள்ளுதல், மிகக் கொடுமையான செயலான சூதாடுதலை விரும்புதல், கூறிய உறுதிமொழியிலிருந்து தவறுதல் ஆகியன தீமை பயக்கும் எனக் கூறுகிறான். இதன் மூலம் சூதாடுவது பல தீயசெயல்களுக்கு நிகரானது என்பது தெளிவாகிறது. (பாடல் 1103).



பார்த்தசாரதி

பாரதப் போரில் நெறிமுறைகளை மீறி, பாண்டவர்களின் புதல்வர்களைக் கொன்ற அசுவத்தாமனிடம் துரியோதனன், “பாலர் மகுடம் துணிந்தது இன்று என்ன வீரியம், என்ன நினைத்து இச்செயலைச் செய்தாய், எங்கள் குலக்கொழுந்துகளைக் கொன்று விட்டாய். எங்களுக்குத் தலைமுறை இல்லாமல் போயிற்று மற்றும் இது அறச் செயலும் அல்ல” என்று கடிந்து கொள்கிறான். இதன் மூலம் போர்க்களத்திலும் அறம் பிறழா நெறிமுறை வலியுறுத்தப்படுகிறது (பாடல் 4301,4302)

இவ்வாறு வில்லிபுத்தூரார் தம் காப்பியத்தில் கதை மாந்தர்கள், அவர்களின் கூற்றுகள் வாயிலாக அறக்கருத்துகளைக் கூறியுள்ளார்.

## தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்

காப்பியங்களிலும் இதிகாசங்களிலும் பல்வேறு பண்புகளின் உருவங்களாகப் பல பாத்திரங்கள் இடம்பெற்றுள்ளன. தாய்மைக்கு விசையை, மாதவி, குந்தி; கற்பிற்குக் கண்ணகி, சீதை, பாஞ்சாலி; தந்தை பாசத்திற்குத் தசரதன்; பொறுமைக்குத் தருமன், இராமன்; நட்பிற்குக் குகன், கர்ணன், தொண்டிற்கு இலக்குவன், அனுமன்; ஈகைக்குக் கர்ணன்; நீதி வழுவா அரசாட்சிக்குப் பாண்டியன்; தியாகத்திற்குப் பீஷ்மர், பரதன்; விவேகத்திற்கு விதுரன் முதலான பாத்திரங்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.



குகன்

கூடா நட்பிற்குக் கூனி, சகுனி, கட்டியங்காரன்; ஒழுக்கப் பிறழ்விற்குக் கோவலன், இராவணன்; பொறாமைக்குத் துரியோதனன், சூர்ப்பணகை, காந்தாரி; வழி தவறிய மகனை நல்வழிப்படுத்தத் தவறிய திருதராட்டிரன்; பெண்மையை இழிவுபடுத்திய துச்சாதனன் போன்றோர் தீமையின் உருவகங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

இலக்கியங்கள் அறக்கருத்துகளைப் பெரும்பாலும் நேரடியாகப் பேசாமல் கதை மாந்தர்கள் மூலமோ, நிகழ்ச்சிப் போக்கிலோ உணர்த்திச் செல்கின்றன. இதன் காரணமாகவே இலக்கியங்களும் அவை கூறும் நெறிமுறைகளும் மக்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்றுவிடுகின்றன.

### உங்களுக்குத் தெரியுமா?

திருவள்ளுவர் காலத்திலும் அதற்கு முன்பும் பின்பும் முடியாட்சியே நிலவிவந்தது. நாட்டையாளும் மன்னனே, தவறு செய்பவர்களைத் தண்டிக்கவும் செய்தான். மன்னன் தண்டித்தாலும், நீதி வழங்குவதற்கென அறங்கூறு அவையங்களும் இருந்தன என்பதை இலக்கியச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

அறங்கூறு அவையம் – பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி,492.

அறன்நிலை திரியா அன்பின் அவையம் – புறநானூறு, 71.

மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து

அறங்கெட அறியா தாங்கு– நற்றிணை, 400

அறங்கெழு நல்லவை– அகம், 93.

முறையுடை அரசன் செங்கோல் அவையத்து - குறுந்தொகை, 276.

அரைசுகோல் கோடினும் அறங்கூறு அவையம் - சிலம்பு 5 :135

அறநூல்களை அடிப்படையாகக் கொண்டு நீதி வழங்கியமையை 'அறங்கூறு அவையம்' என்னும் சொல்லாட்சி வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

## நிறைவுரை

சங்க இலக்கியங்கள் மனமொத்த தலைவன் தலைவிக்கு இடையே தோன்றும் மேன்மையான அன்பை, உயர்ந்த இடத்தில் வைத்துத் போற்றுவதைத் தொல்காப்பியத்தின் வாயிலாக அறிய முடிகிறது. மனித உறவுகளில் மிகவும் பெருமையுடையதாக நட்பு போற்றப்படுகிறது. மக்கள் வாய்மையைச் சிறந்த அறமாகக் கொண்டிருந்தனர் என்பதையும், மன்னர்கள் கொடை வள்ளல்களாகத் திகழ்ந்தனர் என்பதையும் அறியமுடிகிறது. உலகம் முழுமைக்குமான வாழ்வியல் நெறிகளைத் திருக்குறள் எடுத்து இயம்புகிறது.

சிலப்பதிகாரம், மன்னர்களின் நீதிநெறி வழுவாத சிறப்பினைப் பதிவு செய்கிறது. அறத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுபவர், தோல்வியையே அடைவர் என்றும், மாறாகச் சான்றோர் வகுத்த நெறியில் இருப்பவர், வாழ்க்கையில் அறவழியில் வெற்றி பெறுவர் என்றும் வில்லிபாரதத்தின் மூலம் அறிய முடிகிறது.



Unit 3.indd 53 13-02-2020 19:58:19

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வாய்மையை பிழையாநன்மொழி' என்று குறிப்பிடும் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று
   அ) குறுந்தொகை ஆ) நற்றிணை
   இ) அகநானூறு ஈ) புறநானூறு

2. சங்ககால பெண்பாற் புலவர் வரிசையில் இடம் பெறாதவரைத் தேர்ந்தெடுக்க?
   அ) ஔவையார் ஆ) ஆதிமந்தியார்
   இ) காரைக்கால்அம்மையார் ஈ) நப்பசலையார்

3. ஆற்றுப்படை நூல்கள் இயற்றப்பட்டதன் குறிக்கோள்
   அ) அரசர்களின் போர் தன்மையைப் பற்றி பாடுவதற்கு இயற்றப்பட்டது.
   ஆ) பாணர்களைப் பற்றிப் பாடுவதற்கு இயற்றப்பட்டது.
   இ) பாடினிகளைப் பற்றிப் பாடுவதற்கு இயற்றப்பட்டது.
   ஈ) அரசர்களின் வள்ளல் தன்மையைப் பற்றிப் பாடுவதற்கு இயற்றப்பட்டது.

4. 'கோவலன் செய்ந்நன்றி மறவாப் பண்பினன்' என்பதை எக்கூற்று புலப்படுத்துகிறது?
   அ) யானையிடமிருந்து முதியவரைக் காத்த கருணை மறவன்.
   ஆ) கணவனுக்கும் மனைவிக்கும் பெரும் பொருள் கொடுத்து இல்லற வாழ்வில் இணைத்து வைத்த செல்லாச் செல்வன்.
   இ) 'மணிமேகலா' என்ற தெய்வத்தின் நினைவாகத் தன்மகளுக்கு மணிமேகலை என்று பெயர் சூட்டியவன்.
   ஈ) தலைவனை இழந்து தடுமாறும் குடும்பத்தாரையும் அவர்தம் சுற்றத்தாரையும் ஆறுதல் கூறி அரவணைத்த இல்லோர் செம்மல்.

5. பின்வருவனவற்றுள் அக நூல் எது?
   அ) நாலடியார் ஆ) குறுந்தொகை இ) இன்னாநாற்பது ஈ) திருக்குறள்

6. சரியான விடைக் குறிப்பை தெரிவு செய்க
   அ) வாக்குத்தவறாமை - 1. சபரி ஆ) செயல்வீரர் - 2. குகன்
   இ) நட்பு - 3. அனுமன் ஈ) விருந்து - 4. தசரதர்

   அ) அ- 3 ஆ-4 இ-1 ஈ-2 ஆ) அ-4 ஆ-3 இ-2 ஈ-1
   இ) அ-1 ஆ-2 இ-3 ஈ-4 ஈ) அ-4 ஆ-3 இ-1 ஈ-2

7. பொருந்தாத இணையைச் சுட்டுக.
   அ) தருமன் - பொறுமை ஆ) அர்ச்சுனன் - வில்லாற்றல்
   இ) பீமன் - கொடை ஈ) துரியோதனன் - பொறாமை

8. சரியான விடைக் குறிப்பை தெரிவு செய்க
   அ) பாண்டு - 1. காந்தாரி ஆ) இராமன் - 2. மண்டோதரி
   இ) இராவணன் - 3. சீதை ஈ) திருதராட்டிரன் - 4. குந்தி

   அ) அ-4 ஆ-3 இ-2 ஈ-1 ஆ) அ-3 ஆ-4 இ-1 ஈ-2
   இ) அ-2 ஆ-3 இ-4 ஈ-1 ஈ) அ-1 ஆ-2 இ-3 ஈ-4

9. பின்வருவனவற்றுள் பொருந்தாத இணை எது?
   அ) கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் ஆ) ஔவையார் - அதியமான்
   இ) பாரி - கபிலர் ஈ) கூனி - சகுனி

10. தமிழில் விருத்தப்பாவில் தோன்றிய முதல்காப்பியம்
    அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) வளையாபதி ஈ)சீவகசிந்தாமணி

ABHMIQ



Unit 3.indd 54 13-02-2020 19:58:19

## குறுவினா

1. மனித இனம் வேளாண் சமூகமாக எவ்வாறு வளர்ச்சியடைந்தது?
2. மணிமேகலையில் மையப்பொருளாகக் கூறப்படும் அறக்கருத்துகள் யாவை?
3. தமிழ் மன்னர்களின் நீதிதவறாத ஆட்சி முறை சிறப்பு இரண்டனை கூறுக.
4. வில்லிபாரதத்தின் மையக் கருத்து யாது?
5. துரியோதனனுக்கு மறுமொழியாகத் தருமன் கூறியவை யாவை?
6. பிற்கால அறநூல்கள் யாவை?

## சிறுவினா

1. நல்லோர் கூறிய அறநெறி துறந்த எனக்கு நற்கதி உண்டா? எனக் கோவலன் கூறியவை யாவை?
2. சங்ககாலப் பெண்பாற்புலவர்களின் பெயர்களைச் சுட்டுக.
3. அறப்போர் முறை – வரையறுக்க.
4. சங்க கால மன்னர்களின் விருந்தோம்பல் பண்புகளைக் கூறுக.
5. மணிமேகலை - பெயர்க்காரணம் கூறுக.
6. "யானோ அரசன் யானே கள்வன்" இது யார் கூறியது? இக் கூற்று உணர்த்தும் செய்தி யாது?
7. வளையாபதியில் கூறப்படும் அறங்கள் யாவை?

## நெடுவினா

1. தமிழர்களின் விருந்தோம்பல் பண்பினைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுத்துக.
2. சங்க கால மன்னர்களின் கொடைத்தன்மையை விவரிக்க.
3. மனித மனங்களைப் பண்படுத்த நாலடியார் கூறும் அறக்கருத்துகள் யாவை?
4. சீவகசிந்தாமணியில் கூறப்படும் அறக்கருத்துகளை விளக்குக.
5. கோவலன் மேம்பட்ட பண்புடையவன் என்பதைச் சான்றுடன் விவரி?

### உங்களுக்குத் தெரியுமா?

**தமிழ்நாட்டில் நிகழ்ந்த போர்களில் பேர் தெரியாப் பெருவீரர் பலர் உண்டு. அவர்களைப்பற்றித் தெரிந்துகொள்வோமா?**

**பாலாற்று வென்றான் :** பாலாற்றங்கரையில் வெம்போர் புரிந்து வெற்றி பெற்ற வீரனைப் 'பாலாற்று வென்றான்' எனப் பாராட்டினர். வடஆர்க்காட்டு ஆரணி வட்டத்திலும், வேலூர் மாவட்டத்திலும் பாலாற்று வென்றான் என்னும் பெயருடைய ஊர்கள் உள்ளன.

**செய்யாற்று வென்றான்:** செய்யாற்றங்கரையில் வென்ற வீரனுக்குச் 'செய்யாற்று வென்றான்' எனப் பேருண்டு. வடஆர்க்காட்டுச் செய்யாற்று வட்டத்திலும் தென் ஆர்க்காட்டு விழுப்புர வட்டத்திலும் செய்யாற்று வென்றான் என்னும் பெயருடைய ஊர்கள் உள்ளன.

**சரந்தாங்கி:** சரமாரி பொழியும் போர்க்களத்தில் சஞ்சலமின்றி நின்று போர் புரிந்தனர் தமிழ்நாட்டு மெய்வீரர். மாற்றார் வில்லினின்று எழுந்து வந்த அம்புகளை மலைபோன்ற தன் நெஞ்சிலே தாங்கி நிலைகுலையாமல் நின்றான் ஒரு வீரன். அவ்வீரத்தைக் கண்டு வியந்தவர்கள், 'சரந்தாங்கி' என்று சிறப்புப் பெயர் அளித்துச் சீராட்டினர். அறந்தாங்கிய சீலன் பெயர் தஞ்சை நாட்டிலே ஓர் ஊருக்கு அமைந்ததுபோல சரந்தாங்கிய வீரன் பெயர், பாண்டி நாட்டு நிலக்கோட்டை வட்டத்தில் ஓர் ஊரின் பெயராக உள்ளது. (சரம் – அம்பு)



Unit 3.indd 55 13-02-2020 19:58:19